நாள்: 12.09.2024
OP.111/2020
பெயர் செல்வேந்திரன்
ம.சா.1

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் எனது திருமணத்திற்கு எவ்வளவு செலவு செய்தேன் என்பதைக் காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மனைவியின் சின்ன பாட்டி திருமணத்தற்கு பின்னர் ஜெயலட்சுமி என்பவர் வீட்டில் ஒத்திக்கு ஒரு ஆண்டு இருந்தோம். உத்தமபாளையம் காவலர் குடியிருப்பில் 3 1/2 ஆண்டுகள் குடியிருந்தோம். மேற்படி 41/2 ஆண்டுகளில் எங்களுக்குள் எந்தப் பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். 2012 முதல் 2015 வரை எனக்கு திருமணத்தின் பயனாக இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தது என்றால் சரிதான். எனது குழந்தைகளுக்கு நான் கல்வி கட்டணம் செலுத்தினேன் என்பதைக் காட்ட ஏதாவது ரசீதை தாக்கல் செய்ய முடியுமா என்றால் இல்லை. நானும் என் மனைவியும் கூட்டாக வங்கி கணக்கு எதுவும் வைத்திருக்கவில்லை. ஆனால் குடும்ப வரவு செலவுகளை என் மனைவி தான் பார்த்தார். இரண்டாவது குழந்தை பிறந்தவுடன் கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய பணத்தில் என் மனைவி ஆடம்பரச் செலவுகள் செய்தார் என்பதை குறிப்பிட்டு என்னால் சொல்ல முடியாது. 2013 ல் நான் ரூ.5,00,000 கடன் பட்டு அந்த கடன்களை என் மனைவியின் பெற்றோர்கள் தான் கடன்களை அடைத்தார்கள் என்றால் சரியல்ல. 2020 6 வது மாதத்தில் இருந்து நாங்கள் பிரிந்து தான் வாழ்ந்து வருகிறோம். 2011 முதல் 2020 5 ம் மாதம் வரை சேர்ந்து வாழ்ந்து வந்தோம். என் மனைவி இரண்டாம் 2 ம் எதிர்மனுதாரருடன் தவறான உறவு வைத்திருந்தார் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கால் டீட்டேல் கொடுத்துள்ளேன். அவருடைய தவறான உறவை நிரூபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் என் மனைவி ஒத்துக்கொண்டு எழுதிக்கொடுத்துள்ளார். விவகாரத்து பெற வேண்டும் என்பதற்காக நான்தான் தவறாக நடந்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மகள்களை இன்றுவரை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் பள்ளியில் சென்று என் மகள்களை பார்த்து வேண்டியதை செய்து வருகிறேன். அவர்களை விசாரிக்கவும் தயாராக உள்ளேன். 16.06.2020 ல் என் மனைவியின் சகோதரர் கோவிந்தன்பட்டியில் வைத்து என் மீது ஏற்ற வந்தார். அந்தக் கால கட்டம் கொரணா காலகட்டம் என்றால் சரிதான். ஆனால் மாவட்ட அளவில் தளர்வு இருந்தது. எனது மைத்துனர் இந்திய தபால் துறையில் கோயம்புத்தூரில் பணியாற்றி வந்தார் என்றால் சரிதான். கொரணா காலக்கட்டத்தில் காவல் துறை அனுமதி பெற்று தான் காரில் பயணகிக்க முடியும் என்றால் சரிதான். காரை ஏற்றி கொள்ள வந்தார் என என் மைத்துனர் மீது எழுத்து பூர்வமாக புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என் மனைவி தகாத உறவு வைத்துள்ளதால் சேர்ந்து வாழ தயாராக இல்லை. நான் சொல்வது உண்மையல்ல என்றும், என் மனைவி என் குழந்தைகளுடன் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றால் நான் தயாராக இல்லை. நான் சொல்வது உண்மை என்றால் ஊர் பெரியோர்கள் வைத்து பேசி முடிவெடு பிரித்து விட்டுருப்பார்கள் என்றால் சரியல்ல. நான் ஒரு ஒப்பந்த பிறப்பித்துள்ளோம். ம.சா.ஆ 6 ஆவணத்தில் செல்போன் நிறுவனம் ஜியோ நிறுவனம் ஆகும். 1 ம் எதிர்மனுதாரரின்

செல்போன் எண் எனக்கு சரியாக தெரியவில்லை. ம.சா.ஆ 6 ஆவணத்தை நிரூபிக்க அந்த செல்போன் நிறுவனத்தை விசாரித்துதான் பேசிய விபரங்களை முடிவு செய்யமுடியும் என்றும், சிம் கார்டை மட்டும் தாக்கல் செய்தால் அதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்றால் சரியல்ல. ம.சா.ஆ 8 ஆவணத்தில் உள்ள தேதியில் கொரனா தொற்று காலம் என்றும், அப்போது காவல் நிலையததில் விசாரணை நேரடியாக நடைபெறவில்லை என்றும், ஆனால் நான் என் அதிகாரத்தை பயன்படுத்தி புகார் மனு ரசீதை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. என் மனைவி நான் கொடுத்த புகார் மனு விசாரணையில் சேர்ந்து வாழ வேண்டும் என்று தான் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. ம.சா.ஆ 10 ஆவணத்தை அதை பதிவு செய்த காவல் நிலைய அதிகாரியை வைத்து நிரூபணம் செய்ய தயாராக உள்ளேன். 30.07.2020ல் நான் ஒரு அரசு ஊழியர் என்பதால் தகுந்த நீதிமன்றம் மூலமாகதான் விவாகரத்து பெற முடியும் என்பது எனக்கு தெரியுமா என்றால் வெளியே வைத்து எழுதிய ஆவணம் விவாகரத்து மனுவை தாக்கல் செய்தவற்காக எழுதப்பட்ட ஆவணமாகும். காவல் நிலையம் மூலமாக நான் பெறப்பட்ட ஆவணம் அனைத்தும் என்னுடைய அதிகாரத்தை பயன்படுத்தி பெறப்பட்ட ஆவணம் என்றும் அது சட்டட்பபடி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. என் மனைவியின் நகைகள் அனைத்தும் என் கைவசம் தான் உள்ளது என்றும், அவர் குழந்தைகளின் நலன் கருதி எப்போதும் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறார் என்றால் நான் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வைத்து நகைகளை ஒப்படைத்துவிட்டேன். நான் சோந்து வாழ தயாராக இல்லை. என்னுடைய மனைவி சேர்ந்து வாழ தயாராக உள்ள நிலையில் என்னுடைய விவாகரத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.